உ

சிவமயம்.

முருகன் துணை.

# சிற்றம்பலநாடிகள்

அருளிச்செய்த

# திருச்செந்தூரகவல்.


PRINTED AT THE

MANONMANI VILASUM PRESS

MADRAS.

1902.

இதன்விலை பை-6.

உ

சிவசண்முகன் துணை.

## சிற்றம்பலநாடிகள்

அருளிச்செய்த

# திருச்செந்தூர்ச் சுப்பிரமணியர் அகவல்.

### காப்பு.

நந்தூரலைவாயி னண்ணியுல கேத்தவொ
ளிர், செந்தூர்த் திருவகவல் செப்பவே-
ணிந்தூருஞ், செஞ்சடையான் யானைச்
சிரமுடையா னன்பிலிக, நெஞ்சடை
யான் பாத நினைந்து.

### நூல்.

ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனு
க், காமென மொழிந்தே யருட்குரு வா
னோன், பொற்புறு பொதிய வெற்புறுமு
னிக்கு, நற்பொருள் விளக்கு ஞான தே
சிகன், பொய்வழிச் சமணப் புலையிருணீ
க்கிச்,சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி
முருகன் குமரன் மூவிரு முகன்மான்
மருகன் சிவனருண் மைந்தன் கந்தன்

மலைமகள் பாலன் வயங்கிளர் வேலன்
கலைபயில் புலவன் கார்த்திகேயன்
வளையொரு மருப்பு வாரண முகவற்
கிளையவன் குகன் மயிலேறும் பெருமாள்
சூர சங்காரன் சுப்பிரமணியன்
வீரருள் வீரன் விரைகமழ் கடம்பன்
சேந்தன் வள்ளி தெய்வயானை
காந்தன் செவ்வேள் காங்கேயன் சிலம்ப
னாயிர நாமத் தையன் றுய்யன்
சேயருட்கோமான் சேவற் றுவசன்
வரங்கிளர்கருணைப் பரங்கிரியுறையோன்
மாவினம் விளங்கு மாவினன் குடியோ
னந்து ரலைவாய்ச் செந்தூர்க் கடவுள்
பாரகம் விளக்கு மேரகத் தமர்வோன்
மாலய னிறைஞ்சுஞ் சோலைமா மலையோ
ன், குன்று தோறாட னென்றென மகிழ்ந்
தோன், பாசக் கங்குற் பசையறப் பருகி
நேசர்க் கின்ப நிறையொளி பரப்பித்
திருவளர்செழும்பொற்செந்தாமறைக்கு
மருவுமோர்சான்றாய் மலர்ந்தபொற்பத
மு, நினைப்பொடு மறப்பு நீங்கிடு மதீத

மனைப்பர நாத மறையொலி யலம்பும்
பாந்தளஞ் சுடிகைப் பன்மணி யிழைத்த
கார்ந்துசெஞ் சுடர்க்காற்கழற்பரி புரமுங்
கண்குளிர் கனகக் கவின்கிடந் திலங்குங்
கிண்கிணி யிசைக்குங் கிளர்திரு வரையு
ம், வட்டுடை வரிந்து தொட்டகூர் வா
ளுங், கட்டுறு யோகப் பட்டிகைச் சிறப்
பு, மிந்திர வில்லிரண் டெதிர்பொருத்
துவபோற், சுந்தரவாழி சூட்டு மங்குலியு
மன்னிரு முகிலான் மணிதரு நிதிசேர்
பன்னிரு கமல பாணியு மவற்றிற்
சூலமும் வேலுந் துரோணமுஞ் சரமும்
பாலமுங் குலிசமும் பரிசையும் வாளு
மாழியு மழுவு மபயமும் வரதமுஞ்
சூழுமுன் கைக டுலங்குபொற் கடகமு
மந்தரந் தழுவும் வாசுகி யன்ன
சந்தத மொய்ம்பு தழைத்த சேயூரமும்
பரிதி மண்டலம்போற் பதக்க முத்தாரந்
தருசரப் பணிக டயங்கு பூண்மார்பு
மட்டிகை பணினல் லக்கிருங் குவளை
விட்டொளி விரிக்கும் வியன் கந்தரமு

மூவிரு திங்கண் முதிர்ந்த பூரணம்போ
ன், மேவு சண்முகங்கள் விளங்குநற்பொ
லிவு, முளரிமுந் நான்கு மூவிரு குமுதம்
வளர்மதியுதயத் திடைவளர்ந் தனபோன்
முகந்தொறுங் கருணை யுகந்தகண் களு
ஞ்சீ, ருகந்த பொற்குதலை யொழுகுவாய்
வனப்புந், தொட்ட பொற்குழைக ளேக்கு
குண்டலமுஞ், சுட்டியுநுதலி விட்டவெ
ண்ணீறு, மன்னிருமகளிர் மாட்டலால்
வணங்காச், சென்னி சேர்ந்தொளிருஞ்
சேகரச் சிறப்பு, மகபதிமகளும் வள்ளிய
ந் திருவுஞ், சுகமணஞ் சூட்டுந் தொங்க
ல்கடம்புங், கோதை சூழன்னோர் கொ
ங்கையாற்பூசு, மேதமில் சுகந்த லேபன
ப் பூச்சு, மரகதப் பொருப்பும் வயிரவான்
பொருப்பு, கிரல்வல மிடமார் நெடிய
பொற்கிரிபோ, லகிலமு மீன்றவன்னைய
ரிருவர், மகிழ்வுற விருபான் மன்னிவாழ்ந்
திருப்ப, பன்னிறந் தளிர்க்கும் பச்சைவா
ன்கிரிமேற், றுன்னிரு கோடி சூரிய ருதி
த்தாங், கவரவரச்ச மடுதிறன் மயூரக்

குரகத் மேறிக் குலவு காட்சியுங்
கரந்தெனை யாளுங்கருணையாற்புவிமேற்
சரந்தரு மானிடச் சட்டை சாத்தி
யழியா வொளிவந் தழியா மொழியை
வழியா மொழிய வந்தனங் குருவா
யாணவக் கடற்கு ளலைபடு திரும்பும்
பூணுறு மாயைப் புலிவாய்ப் பசுவுங்
கருமச் சூறைக் காற்றுறு சருகுந்
தருமிச் சுழலைச் சார்ந்திடு மெளியசின்
வருத்தங் குறித்து வருந்தே லுனக்குத்
திருத்தகு முணர்வு செப்பவேண்டி
வந்தன முத்தி வழங்குது மென்று
னந்தநன் மொழிகேட் டன்பொடுந் துதி
த்தேன், கற்பக வனம்போற் கமழ்பூங்கா
விற்,பொற்புறவிளங்கும் பொலன்மணிக்
கனகப், பன்னகசாலையுட் பதுமபீடிகை
மேற், றுன்னுபூந் தருக்கள் சூழ்கற்பகம்
போற், சங்க மீனுப்பட் டயங்குவெண் ம
திபோ, லங்கைகூப்பி யடியர்நின் றேத்த
வினிதெழுந் தருளி யென்முக நோக்கிப்
புனித நீராடப் போகென மொழிந்தா

னீரிடை மூழ்கி நெடுங்கலை யணிந்து
சார்தலு மோமச் சடங்குக ளியற்றி
வெண்ணீ றணிந்து விதியெழுத் தஞ்சுந்
தெண்ணீர் மையினிற் செவியிற் புகட்டி
யறுகெரு வுடன்கை யள்ளுநீ ருடனென்
மறுகுட லாவி வான்பொருள் கொண்டா
ன், பரவுசஞ் சிதகம் பார்வையா லொழிக்
த, விரவுமுற் பவங்கள் வினையுடம் பளவி
லத்த னருண்மே லாகா மியங்கள்
பற்றில நினது பண்புபோ லிருந்த
நம்பெரு வடிவை நாடுகென் றருளித்
தம்பொற் கரமல ரென்றலை தீண்டி
முழுநிலம் புரப்ப முடிசூட் டேபோற்
செழுமணிப்பதமென்சிரமிசைப் பொரு
த்தி, பாத தீர்த்தம் பரிகல சேட
மாதரக் குழவிக் கன்னைபோ லருத்திக்
குருபதம் பணிதல் குஞ்சர முகனைக்
கருதல் சங்கற்பங் கங்கையின் பூசை
திருந்து முத்திரைக டிக்குபந் தனநீ
டருந்துயர் நீக்கு மந்திர சந்தி
தத்துவத் திரயந் தாளத் திரயஞ்

சுத்தா சமனர் தொடுமிடந் தொடுகை
கரமுட னங்கங் கருதிடு நியாசம்
விரவு தருப்பணம் விளங்கு நீறணிகை
யஞ்செழுத் தோதி யாதவற் பணிதல்
விஞ்சு மாகமத்து விதிமுறை முடித்துப்
பண்டையோர் நம்மைப்பரவுசொற்பாட
ல்,கொண்டுநீ துதிகள் கூறெனவிளம்பிப்
பத்திகூர் விரதம் பயின்றிடி னலாஞ்
சத்தினி பாதந் தருமெனப் பகர்ந்தா
னன்னமிட்டெவர்க்கு மரும்பசிதீர்த்துப்
பன்னருஞ்சாலைப்படித்துறைத் தடாகம்
வந்தா ரருந்தும் வாசநீர்ப் பந்தர்
நந்தா வனங்க ளலம்பெற வமைத்தே
யீங்கிவை முதலா வெண்ணீறன் கறமுந்
தீங்கிலா வண்ணஞ் செய்கென மொழிந்
தான்,காலையிலெழுந்து கடிமலர்பறித்து
மாலிகை தொடுத்து மதிமுடிக் கடவுட்
பூசனைக் குதவி புனிதவா லயத்தின்
வாசல் விளக்கிட் டலகொடு மெழுகிட்
டாறுகாலமுஞ்சென் றரன்பதமிறைஞ்சி
யேறுளானடியார்க்கேவல்பூண்டொழுக

விசித்திர முதலா வியற்றுதல் சரியை
சுத்தசா லோக்கியந் துய்க்குமென் றிசை
த்தான், பொய்வகை நீக்கிப் பூத முதலா
வைவகைச் சுத்தி மெய்வகை விளக்கி
மணம் பொலிகந்த வர்க்கமா மலர்க
ளிணங்குநற் றூப மெழில்குலாந் தீபந்
தருநை வேத்தியந் தாம்பூல முதலாய்
வருமுப சார வகைபல வியற்றி
யகந்தவிருள த்தோ டகம்புற மிறைஞ்சிச்
சுருங்கிள ரங்கித் தொடுகடன் முடித்துப்
போற்றுறு மிலிங்க பூசனைக் கிரியை
சாற்று சாமீப்பியந் தருமெனப் பகர்ந்தா
ன், கட்டளை கப்பணங் கட்டளை யிட்டுத்
தட்டுறு மலந்தீர் சாதன மொழிந்து
கடுங்கொலைவெறும்பொய் களவுகட்காம
ம், படும்பெயர் பஞ்ச பாதகந் தீர்த்துக்
காமங் கோபங் கசடுறு முலோபந்
தீமன மோகஞ் சேர்மத மாச்சரிய
மீண்டிவை முதலா வெண்ணில் பாவம்
பூண்டன வொழியப் புந்திதந் தருளி
மன்னுகி ழாணி வருத்தமி லுணர்வாய்ப்

பின்னுமே லரணிப் பிரணவ மாகக்
கடையவே ஞானக் கனலெழு மென்றே
தடைபடாப் பாச தகனஞ் செய்தா
னருளெனுந் தலத்திலறிந் துகான்மடக்கி
யிருளறவிருக்கு மியற்கையும்விண்டான்
பன்னிரண் டங்குலம் பறிந்திடும்பிராண
ன், பின்னதி ஞன்கும் பிரிந்துபோ மத
ஞ, லாயுளுங் குறைந்திட் டாக்கையுந்த
ளர்ந்து, சாயுமென் றுரைத்துச்சாகாதிரு
க்க, நாடியோர் பத்து நாடி நாடிகள்புக்
கோடிய வாயு வொருபதுஞ் சேர்ந்து
சொன்ன நாடிகளிற் சுழுமுனை நடுவா
மின்னதின் பக்கத் திடைபிங் கலையா
மக்கினி திங்க ளாதவன் கலைகள்
புக்கமுச் சரமும் போய்மீண் டியங்கு
மூலகுண் டலியா முரகமூச் செறிந்து
வாலது மேல்கீழ் மண்டல மிட்டுப்
படந்தனைச் சுருக்கிப் படுத்துறங் குவது
நடந்துமே னேக்கி ஞானவீ டளிக்கு
மண்டல மூன்று மருவுதூண் புகவக்
குண்டலி யெழுப்புங்கொள்கை யீதென்

ருன், முன்னதி ரேசக முப்பத் திரண்டு
பின்னது பூரகம் பேசமீ ரெட்டுக்
கும்பக நாலோ டறுபதாக் கூறுந்
தம்பமாத் திரையின் றன்மையு முணர்த்
தி, மூலமே முதலா முடிநடு வுச்சிப்
பாலள வினுநீள் படிதுலை நோக்கி
மூலாதா ரத்தின் முச்சுழிச் சுடரை
மேலாதா ரத்தின் மெல்லெனத் தாண்டி
யிருவழிக் காலு மொருவழி நடத்திக்
கருவழி யடைத்துக் கமலமா றுருவிப்
பன்னிரண் டந்தம் பரிதியு மதியு
மன்னிபொன் றுனவண்ணமுந் தெரிந்து
கமடமைந் தடக்குங் கருத்தெனப் பொறி
யின், மமதைக ளடக்கி மனேலய மாக்கி
மூலக் கனலான் முழுமதி யுருக்கிப்
பாலைப் பருகும் பண்பு தந்தருளி
யிட்ட காமியமு மெண்ணெண் கலையு
மட்டமா சித்தியு மன்புறக் கொடுத்துப்
பன்னிரு பகுதியும் பறவா வண்ண
மென்னுளே நிறுத்து மியற்கையும்வீண்
டான், மூலமே முதலா மூவிரு தலத்தின்

கோலமும் பூதக் குறிகளு மதன்பா
லைம்பதோ டொன்று மக்ஷர விதமும்
பொன்பொலி கமலப் பூவிரு மூன்றுந்
தாரக வெழுத்துஞ் சார்பெழுத் தஞ்சும்
வாரண முகவன் மலரோன் றிருமால்
வருத்தமி லுருத்திரன் மகேஸ்வரன் சதா
சிவ, னுருத்தெளிந் திடநம் முருவேயாகு
ம், மாறு மாமுகத் தமர்ந்தது மிதுவே
வேறிலை யென்று மெய்ம்மொழி செப்பி
யிலங்குமாயிரத்தெட்டிதழ்த்தாமரைமே
ற், றுலங்கிடு நடனச் சோதியுங் காட்டி
யிருபத் தோரா யிரத்தறு நூறாய்
மருவிநா டோறும் வளர் சுவாசத்தைச்
சங்கென வாங்கிச் சமனுறக் கும்பித்
தங்கென் றெழுப்பும் சபையு மருளிப்
பொருளரு ளான்மாப் பொருந்திடுந் தி
ரோதை, மருவிரு மலமாய் வயங்குமஞ்
செழுத்திற், றிரோதையுமலமுந்தீர்த்தத
னிடத்தில், வரோதைய மான வாசியை
நிறுவி, வளம்பொலி சிவாயவாசியென்று
ளத்தில், விளம்புகநின்னை விளக்குமான

ந்த, முத்தியஞ்செழுத்து மொழிந்தனமி
தனைச், சித்த சாந்தியினிற் செப்பென
மொழிந்தான், வாசிவா வென்ன வழங்கு
மூன்றெழுத்தும், பேசுதன் முதிர்ந்தபே
றெனமொழிந்தா, னின்பமாம் வாசி யெ
ன்னு மீரெழுத்தி, லன்புறு மகிமை யதி
சய மென்றான், சியெழுத் தொன்றே சிந்
தையிற் கருதத், தூயதற் சுடராய்த் தோ
ன்றுவை யென்றான், விந்துவு நாதமு
மேவிய வெளியிற், சிந்தையை நிறுவிச்
சிவன்வடி வாகித், தாக்குவை மூல நோ
க்குவை யதீதம், போக்குவை பிறவி யா
க்குவை யின்பெனத், தராப்புகு நார்
போற் சமனுற நிற்கு, மிராப்பக லற்ற
விடத்தே யிருத்தி, நலம்படர் சோதி
நடனகுஞ் சிதத்தாட், சிலம்பொலி கே
ட்கும் திறம்பா லித்தான், மயற்பொறி
புலன்வாய் மனம்புகு நனவி, லியற்றிடு
தவங்க ளியமநிட் டையசாஞ்
சார்பொறி விடுத்த சாக்கிரக் கனவு
சேர்தரு கருத்தாற் செய்தவ நியம

நீங்காக் கரண நீக்கவே நனவிற்
றூங்காத் தூக்கச் சுழுத்தி யாசனமா
மறிந்து தொண்ணூறு மாறும் வேருக்கிப்
பிறிந்துதற் கண்டு பிரமமே தானாய்
சாதனம் விடுத்த சாக்கிர துரியம்
பேதமற் றிருக்கை பிராணா யாமஞ்
சான்றுசாக்கிரம்போய்த் தானிருந்தமை
யுந்,தோன்றிடாதலைச்சுழற்றுங்கால்
போற்,பறந்திடுங்காலாற்பரமறந்தளவிற்
பிறந்திடு மதீதம் பிரத்தியா காரம்
வானெனு மகண்ட வடிவுகண் டெங்குந்
தானென் றிருக்கை தாரணை யாகுங்
காட்சிகளனைத்துங் கண்ணதாய்விளங்கி
யாட்சியி னமைந்த ததுவே தியானந்
தற்பதந் தொம்பதஞ் சார்ந்திடு முபாதி
கற்பனை நீரக் கண்டசிற் பதமாஞ்
சச்சிதா னந்த சமரச நிலைதேர்ந்
துற்றசிற் பதம்பெற் றுலங்குதல் சமாதி
மன்னிடு சாம மறையுப நிடதஞ்
சொன்னவாக்கியத்தினொருமையிதேஞா
ன,யோர்கவெட்டங்க முண்மைநீயுணர்தி

யேகசாரூப்பியமிதுவெனமொழிந்தான்
சரியைகிரியைதருக்கமாயோகஞ் [து
சுருதியின் முறையேதொடங்கியவனைத்
நானெனும் போத நாட்டமே யன்றி
யீனமி லுணர்வுக் கின்பங் காணே
னென்று நான்வினவி யிறைஞ்சலு நகை
த்து, நன்றென மொழிவான் ஞானமுறை
க்கிற், பாச ஞானம் பசுபசு ஞான
மீசஞான மென்ன மூன் றுளவா
மதுகேள் பாச மாவ தாணவ
மதிமயற் கன்ம மாயை யிரண்டுந்
தெருமரல் காட்டுங்கருமமுந் திரோதை
யு, மருவிடும் பஞ்ச மலங்கா ணிதனை
யாசென வுணரா தகமென விருக்கை
பாச ஞானப் பண்பது வாகுந்
தரும்பசு ஞானஞ் சாற்றுதுங் கேண்மின்
வரும்பவ மூட்டு மலமைந் தவற்றி
னுணவ மொன்று மகலா மையினுற்
காணுறு விகடக் கருவிக ளுர்ந்து
தன்னை யுணர்ந்து தானே பிரம
மென்னக் கருதி யிருப்ப தாகும்

பதிஞா னத்தைப் பகருது மகங்கூர்
மதிஞா னத்தால் வரும்பவ மொழியா
தாகையா லருள்புக் காணவமொழிந்திட்
டேகமா மின்பத் தெய்துவ தாகுஞ்
சத்த வழுமுழுதுஞ் சடமுனைக் காணு
தித்தைநீ நடத்தற் கிறைவனே வல்லை
வறிவனு மல்லை யறியா னல்லை
செறியருள்காட்டத்தேர்ந்துகாண்பவனீ
யாது சார்ந்திடினும் யானது வென்னும்
போதநின் றுணர்வு புகன் றிடிற் சிறிதா
மறைத்திடு மூல மலத்தினாற் பாசச்
சிறைக்குளே கிடந்து தேகநா னென்று
வல்வினை புரிந்து மயங்கினை யந்தத்
தொல்வினைப்பயன்கள் சூட்டின மிப்பா
லிருவினை யொப்பு மலபரி பாகந்
திருவருள் பதிக்கத் தேடிவந் தனம்யா
மேவொரு மலத்து விஞ்ஞா னகலருக்
கோவறுமுத்தி யுணர்வினின் றளிப்போ
ம், பெருகிரு மலங்கொள் பிரளயா கலர்
க்கு, மருவுநன் மூர்த்தி வடிவுகொண் டரு
ள்வோ, மும்மல முடைய சகலனீ மொழி

னம்மல நீக்கி யாட்கொண் டருள
மானைக் காட்டி மான்பிடிப் பவர்போன்
மானிட வடிவாய் வந்தனந் தெண்ணீர்
மீனது போல விழியுற நோக்கி
யானதோர் கமடம் போலகத் துன்னிப்
பறவை போலப் பரிசஞ் செய்து
திறமிகு முன்னூற் றெளிவுரை பகர்ந்து
பக்குவத் தடைவே பாலித் தருணீ
புக்கிட வேண்டிப் போந்ததென் றிசைத்
தான், பல்பலசமயப்பகுதிசேர் நிலையுஞ்
சொல்வகைமறப்புந் துகளறமொழிந்தா
ன், றெய்வஞ் சிவமே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்ருன்
பூதம் பழித்துப் பொறியற வுணர்த்தி
வாதமாங் கரண வல்லப நீக்கி
பித்துறுங் கலாதிப் பிணக்கற விடுத்துச்
சுத்த தத்துவந் தூடண மாக்கி
முப்பது முப்பது முப்பதோ டாறெனச்
செப்புங் கருவிகள் சேரா தகற்றித்
துன்னிடு மத்துவா சோதனை கண்டு
தன்னை யுணர்ந்து தனித்திரு ணீக்கி

யாமா முலக மனைத்தினுஞ் சாக்ஷி
நாமே யென்னு ஞானமுங் கடந்திட்
டண்ட பிண்டம் யாவுந் தோன்று
துண்டெனு முணர்வு மேக்கமும் விட்டு
விசுவக் கிராசம் வீறுப சாந்த
மசிபதங் குறிக்கு மாசையுந் தீர்த்துக்
கால்புகா விடத்திற் கறங்காத் தீபமு
மேல்விசை தீர்ந்து வீழ்ந்த பம்பரமுஞ்
சித்திர வடிவுந் திரைதீர் புனலு
மொத்தவந் நிலைசார்ந் தொளியரு ளேக்
கி, யென்செய லேது மில்லையென் றெ
ய்து, தன்செய லேக்கிச் சார்கென மொ
ழிந்தான், சும்மா விருக்கச் சொன்ன
தோர் வார்த்தை, யம்மா வதிசய மாருட
ன் புகல்வேன், கரைசேர்த் தருள்வான்
கருணையை நோக்கி, யிரைதேர் கொக்
கொத் தேசற விருந்தே, னென்செயலக
ன்றேன் யானறவீசன், றன்செய னடக்
குந் தன்மையுங் கண்டே, னுத்தமி கத்
தோ டடைதரு பௌதிகம், போற்று
செய் விகமிவை புரிவதுங் கண்டேன்

புலக்கணக் கதவு பூட்டினேன் சிந்தை
யலக்கண் டீர்ந்த வறிவையுங் கண்டேன்
பொறிபுலன் கரணம் பொருந்திடுங் கலா
தி, யறி கருவிகள்போ யடங்கிடக் கண்
டேன், ருழுமென் னிழப்பிற் றயங்குறு
விளக்கிற், சூழுறு மொளிபோற் றுலங்
குதல் கண்டேன், பஞ்சவருணப் படாம்
விரித்ததுபோல், விஞ்சுபல் சோதி விள
ங்கிடக் கண்டேன், சித்திர படத்திற்சே
ர்பல வடிவ, மொத்த வனேக மொளிக்கு
ளே கண்டேன், பஞ்ச மூர்த்திகளும் பஞ்
ச சத்திகளும், விஞ்சைபோ லொளிக்கு
ள் வெளிப்படக் கண்டேன், மண்ணெ
டுங் கடம்போல் வரைமா திரங்க, ளெ
ண்ணில் புவனமு மென்னுளே கண்டே,
னெழுவகைத் தோற்றத் திலயர்ந்தபல் லு
யிரும், வழுவறச் சோதி வானிடைக் கண்
டேன், றன்னுளே சகமுஞ் சகத்துளே
யானும், பின்னமற் றிருக்கும் பெற்றியுங்
கண்டேன், பளிங்கு போலப் படரொளி
விந்து, விளங்குவெண் மதிபோல் வெ

ளிப்படக் கண்டேன், பரிதி போலப் பட
ரொளி தோன்றி, யொருபது நாத மொ
லிக்கவுங் கண்டே, னக்கினி போலுமன
ந்தமீன் போலுந், தக்கபே ரொளியாய்ச்
சராசர மனைத்தும், புரந்தரு ளகண்ட பூ
ரணமாகிப், பரந்தசெஞ் சுடரைப் பரை
யெனக் கண்டே, னருட்பரை யொளிக்
கு ளழுந்து மந்நேர, முருக்கமுங் கண்
ணீ ரொழுக்கமுந் திகைப்புங், கம்பமும்
புளகமுங் களிப்புட நகையுஞ், சிம்புள்
போல் வலியுஞ் சித்தியுங் கண்டேன்
மேலுள விஞ்சை விதிநெறி விடுத்த
பாலனுன் மத்தன் பக்குவங் கண்டே
னெங்கும் பரைக்கு ளுள்ளொளி யாகித்
தேங்கு மானந்தச் செழுஞ்சுடர் கண்டே
னுள்ளொளிக் குவமை யொன்றுங் கா
ணேன், விள்ளவுந் தரமோ மீமிசை விள
ங்கித், தெளிபடுஞ் சுடரைச் சிவமென்
றுணர்ந்து, களிபடு ஞானக் கண்ணினாற்
கண்டேன், பார்த்திடு மென்னைப் பசை
யற விழுங்க, வார்த்ததில் வீழ்ந்துற் றுண

ந்த மானேன், றன்னைத் தந்தா னென்
னைக் கவர்ந்தான், பின்னைப் பெறுமோ
ர் பேற்றையுங் காணேன்
சுயம்பிர காசஞ் சொரூபா னந்த
மியம்புதற் கரிதா மின்பப் பெருக்கந்
தாடலை போலுங் காறலை போலுங்
கூடலை யென்னுற் கூறவும் படுமோ
பேய்பிடி யுண்டான் பெற்றி போலச்
சாய்படு கருவிச் சங்கமு நானும்
பகலோன் வெயிலிற் பாயிருள் விண்மீன்
சகசமாய்க்கலந்த தன்மையும்பெற்றேன்
காந்த மிரும்புங் கனல்படு மிரும்பும்
வேய்ந்தவிக் தனமும் வெந்நீ ரிருப்புங்
குளிகைபோன் மதுரங் கொண்ட நாவெ
ன்னத், தளிவிடா தென்னைத் தடுத்தாட்
கொண்டான், விண்டேன் பிறப்பைவே
தாகமத்தோர், சண்டைதீர்ந்து சமரசமா
னேன், றிருமலி செந்தூர்ச்சேவற் பெரு
மா, னிருமலஞான நிகழ்த்தியாட்கொண்
ட, திவ்வணந் தமியேற் கிருநிலப் பரப்பி
னவ்வவர்க் களிக்கு மருணெறி யுணரே

ஞைகையா விந்த வருள்பெறல் வேண்டி
ஞேகையாற் றிருச்செந் தூரிடத் தேகிக்
குமரவேள் சரணங் குறித்துமா தவத்தீர்
நிமலமெய்ஞ் ஞான நீவிரும் பெறுவீ
ருத்தம ராவீ ருண்மையீ தென்று
சிற்றம் பலவன் செய்யுளாற் புகன்றான்
கருத்துற வினைக் கற்போர் கேட்போர்
திருத்தகு மன்பாற் றினந்தொறுந் துதி
ப்போர், பெறும்பல னித்தனைப் பேசுதுங்
கேண்மி, ஞறும்பலன் வேண்டு முலகத்
தோரே, பாவந் தீரும் பார்மிகு தரும
மேவிளம் பிறைபோன் மேன்மேல் வள
ருந், துஷ்ட தேவதைக டொட்டதும் வ
ஞ்ச, ரிட்ட பில்லி யிடர்களுந் தீரும்
வாதம் பித்தம் வலிபடுங் காசஞ்
சீதம் வெதுப்புத் தீரா நோய்கள்
வேதனை மிகுந்த வியாதிக ளெல்லா
மாதவற் கண்ட பனிபோ லகலுஞ்
சாகா வரமுந் தந்திடு முடம்பிற்
போகாப் பீடை போக்கி ரக்ஷிக்கும்
வறுமை நீங்கும் வாழ்வுண் டாகுஞ்

செறிதருமஷ்டமாசித்தியுங்கொடுக்குஞ்
சரியை கிரியை சார்ந்திடு மியோகந்
தெரிதரு ஞானமுஞ் செறிந்து வாழ்குவ
[ரே.

வேலுமயிலுந்துணை.

திருச்செந்தூர் அகவல்

முற்றிற்று.



## தனிநேரிசைவெண்பா.

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர் தடிந்தாய், புன்றலைய பூதப்பொருபடை யா-யென்று, மிளையா யழகியா யேறா ர்ந் தானேறே, யுளையாயென் னுள்ளத் துறை.

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு, மன்றங் கமரரிடர் தீர்த்த துவு-மின்றென்னைக், கைவிடா நின்றது வுங் கற்பொதும்பிற் காத்ததுவு, மெய்வி டா வீரன் கைவேல்.

வீரவே லுரைவேல் விண்ணோர் சிறை மீட்ட, தீரவேல் செவ்வே ளிருக்கைவே ல் - வாரி, குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந், தொளைத்தவே லு ண்டே துணை.

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குக், கொன்ன வில்வேற் சூர்த டிந்த கொற்றவா - முன்னம், பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட, த னிவேலை வாங்கத் தரும்.

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன், பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக், கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும், வேலப்பா செந்தில் வாழ்வே.

அஞ்சு முகந்தோன்றி லாறுமுகந்தோன்றும், வெஞ்சமரந் தோன்றில் வேறோன்று-நெஞ்சி, லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று, முருகாவென் றோது வார் முன்.

முருகனே செந்தின் முதல்வனே மாயோன், மருகனே யீசன் மகனே - யொருகைமுகன், றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும், நம்பியே கைதொழுவே னன்.

வேலுமயிலுந் துணை.

முருகன் துணை.

காசியிலெழுந்தருளியிருந்த

தருமபுர ஆதீனத்துச்

சிவஞானதேசிகர்

அருளிச்செய்த

வயித்தீஸ்வரன்கோவில்

# முத்துக்குமாரசுவாமி

## திருவருட்பா.

---

### ஆசிரியவிருத்தம்.

மதிவதன மாடவிரு காதினவரத்ந ம
ணி மகரகுண்டலமாடநாண், மலர்புண்
டரீக விழியாடவருளாட மனமகிழ்மந்த
காசமாடக், கதிருதய மாயிரங் கோடி
யெனவேயிலகு காருண்ய மேனியாடக்,
கனவச்ரபுய வலயமாட வண்டாடக் கட
ப்பமலர் மாலையாட, விதமணி யிழைத்த
பரி புரமாடசரணார விந்தங்களாட நீள்

கை, வெற்றிவே லாட மயிலாட வென் கண்முனீ விளையாட வோடி வருவாய், முதுமறைகளாகம முழங்குபுள் ளூரனே முக்கட்குருக்கள் குருவே, முத்தர் குரு வேயோக சித்தர்குருவேபால முத்துக் குமாரகுருவே. (௬)

பொன்னெடுங் குன்றே யனந்த சந்த் ரோதயம் போலவரு ஞான வொளியே, பொய்யிருளை நீக்கியிடு மெய்யிரவி யுத யமே பூரணானந்த சுகமே, யன்னையினு மன்புமிகு மன்புருவ மேயிருவ ரறிவரிய வொருபிரமமே, யருமருந்தே யமுதசல தியே யடியாரறிந்த கருகூலமே யென், றன்னையே பாடிநின் ருடியிரு கண்ணி னீரோட ரோமஞ் சிலிர்ப்ப, வுள்ளங் க ரைந்துருக வடியனே ஞனந்த வுல்லாச மாவதென்றோ, முன்னைவினை தீர்த்தரு ளு மன்னனே புள்ளூரின் முக்கட்குருக் கள் குருவே, முத்தர் குருவேயோக சித் தர்குருவேபால முத்துக்குமார குருவே.

அடியருள மண்டபமு மையர்செஞ் ச
டிலமு மன்னையர்க ளிருவர்வயிறு, மம்பு
யாசனன் விழியு மிந்திராதிபர் தலையு ம
ருமறை யனந்தமுகமும், படியுண்ட மா
ல்புயமு நெடியமயின் முதுகும் பரங்கு
ன்றுபழனிசெந்தூர், பலதலமு மெங்கே
ரம் விளையாடு முனதுபய பரிபுரபதாம்
புயங்கள், குடிகொண்ட வஞ்சகம் பொ
ய்கபட நாடகங் கொலைகளவு காமமெல்
லாங், கொள்ளைகொளு மென்னுடைய
கள்ளவி தயத்திலே கூசாமலென்று வரு
மோ, முடியிஞ வமரர்கள் வணங்கு புள்
ளூரனே முக்கட்குருக்கள் குருவே, முத்
தர் குருவேயோக சித்தர் குருவேபால
முத்துக்குமாரகுருவே. (௬)

அன்னைசொற் கொருசெவி யையர்
சொற் கொருசெவி யம்மான் றுதிக்கொ
ருசெவி, யானைசொற் கொருசெவி வீரர்
சொற் கொருசெவி யயன்றுதிக் கொரு
செவிவிஞ்ஞோர், மன்னர்சொற் கொரு
செவி வள்ளிசொற் கொருசெவி வான்

வனிதைசொற் கொருசெவி, மறைதுதி க்கொருசெவி யடியர்சொற்கொருசெவி வல்லசுரர்சொற் கொருசெவி, பன்னிர ண்டுங் கொடுத் தென்சொல் கேளாமற் பராமுகம தாயிருந்தாற், பாவியேன் மெ லிவுகுறை யெவர்செவியி லேற்றிப் படுந் துயர்களைந்து கொள்வேன், முன்னம றை நாலும்வந் துன்னுபுள் ளூரனே மு க்கட்குருக்கள் குருவே, முத்தர் குருவே யோக சித்தர் குருவேபால முத்துக்கு மார குருவே. (௬)

உன்புவன மென்புவன முன்வடிவ மென்வடிவ முன்பொறிக ளெனதுபொ றிக, ளுன்கரண மென்கரண முன்மொ ழிக ளென்மொழிக ளுன்விடய மென் விடய, மென்றன்பினுட னின்றெனையு னன்பர்பெறு மின்பவடிவாக வருளேக முதலே, யண்டருறை யண்டநவ கண்ட மு முவந்தருளு மம்பிகைத்ரியம்பக ரிரு ந், தின்பவமுதே வருக வெங்கள்மகனே வருகவெங்களுயிரே வருகவிங்,கெங்கள்

தனமேவருக வெங்களரசே வருக வெங் கண்மணி வருகவெனவே, முன்புவந் த வருடன் விளையாடு புள்ளூர முக்கட்குரு க்கள் குருவே, முத்தர் குருவேயோக சி த்தர் குருவேபால முத்துக்குமார குரு வே. (௫)

சந்திர னிதென்னவும் பெற்றதா யெ ன்னவுந் தயையொடு குளிர்ந்தமுசமுந், தழைந்ததிரு வருண்மழை பொழிந்து மலவெப்பந் தணிக்குங்க்ருபைப்பார்வை யு, மந்தமிலாச் சச்சி தானந்தமாம் வடிவு மழகொழுகு புன்சிரிப்பு, மத்தந் தரித்தி டுசின் முத்திரையு நின்றில கருட்குரவ னாகியிங்கே, வந்திருந் துன்னடியை யெ ன்முடியில் வைத்துலக வாதனையெலா மிறக்க, மாளாத பேரின்ப வாரியினில் வாழவருள் வாலாம்பிகைக்கு மகனே, முந்தி ராமன்பணிய வந்துபுள் ளூரில் வாழ் முக்கட்குருக்கள் குருவே, முத்தர் குருவேயோக சித்தர் குருவேபால முத் துக்குமார குருவே. (௬)

அருவங்க ளலன்றி யுருவங்க ளல ன்றி யருவுருவ மானதன்றி, யண்டபகி ரண்டமவ கண்டங்க ளன்றிமே லழியாத கரணமன்றி, யுருவங்க ளன்றி யாங்குள போகமன்றி யுயிர்தங்கு முடலங்களன் றி, வுளதன்றி யிலதன்றி யுட்புறம் பன் றிமே லுண்டாகி யழிவதன்றி, நிருமல நிராதார நிர்க்குண சிதாகாச நித்தியசக சானந்தமா, நின்சரணையே நினைவதல் லாமெலென்மன நினைக்குமொரு பொரு ள் வேறிலை, முருகுவிரி சோலைமலர் பெ ருகுபுள் ளூரில்வாழ் முக்கட்குருக்கள் குருவே, முத்தர் குருவேயோக சித்தர் குருவேபால முத்துக்குமார குருவே. ()

உருவங் களுனீ யருவங் களுனீ யு பயமொன் றனதுவுநீ, யுலகங்க ளெங் கும்வரு கரணங்கள் யாவுநீ யுருவங்களெ ல்லாமுநீ, வருபெரிய போகங்கள் யாவு நீ மண்ணுநீ வாரிமுத லொண்புனலுநீ, வடவைமுத லனலுநீ வாயுநீ வானுநீ மதி

யுநீ மார்த்தாண்டனீ, யருவங்க ளாமுயிர்கள் யாவுநீ யின்பதுன் பாவதுவுநீ யென்பதை, யடியனெந் நேரமுங் கண்டுகண் டுல்லாச வானந்தமாவ தென்றோ, முருக சரவணபவா பெரியபுள் ளூரனே முக்கட்குருக்கள் குருவே, முத்தர் குருவேயோக சித்தர் குருவேபால முத்துக்குமார குருவே. (௮)

பாகம்வரு நிமிடத்தி லகிலசக மெல்லாம் படைத்துத் திதித்தழித்துப், பூரமசக சானந்த சலதிவிளை யாடவிடு பரமசிவமா முன்னைநா, ணேகதேசத்தி லயனைப் புடைத்துப் படைத்தெதிர் சூரபத்மனைக் கொன், றிந்த்ராதி யோரை ரட்சித் திருந்தாயென் றியம்புவது பெரிய புகழோ, மாகமுறை தேவர்க்கு மனிதர்க்கு முனிவர்க்கு மண்ணுண்டையா நீற்றினால், வறுமையொடு தேகத்தில் வருபிணிக ளெல்லாமு மரண சனனங்களாகு, மோகநோயுந் தவிர வருளுதவு புள்ளூர முக்கட்குருக்கள் குருவே, முத்தர்

குருவேயோக சித்தர் குருவேபால முத்
துக்குமார குருவே. (௯)

எள்ளளவி லாயிரத் தொன்றளவு பத்
தியுன் னிணையடியில் வைத்தபேர்கட்,
கிந்த்ராதி பதமுமுயர் சந்த்ர சூரியர்பத
முமிமையவர்க ளரியபதமுந், தெள்ளு
புகழ் நான்முகக் கடவுள்பத முநெடிய
செங்கண்மால்பதமு மெல்லாச், செல்வ
மும் வருமென்று சொல்லவுங் கேட்டுமு
ன் திருவடிக் கன்பிலாத, கள்ள மானிட
ரை யொருகாசும் பெறாதசீக் கந்தையெ
ன்றே விட்டுநான், கற்றமெய் யடியவர்
கள் குற்றேவல் செய்யக் கடாக்ஷம்வைத்
தருள்வேலவா, முள்ளுடைய தாண்மு
ளரிகள்ளுதவு புள்ளூரமுக்கட் குருக்கள்
குருவே, முத்தர் குருவேயோக சித்தர்
குருவேபால முத்துக்குமார குருவே. ()

முத்துக்குமாரசுவாமி திருவருட்பா

முற்றிற்று.

# புத்தகவிளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவராயர்பாடுதுறை | 0 | 12 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர் 16-சாஸ்திரம் | 0 | 10 | 0 |
| வேதாந்தபோதினி | 0 | 8 | 0 |
| மனவுல்லாசகதை | 0 | 8 | 0 |
| வள்ளலார் (20) சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| பஞ்சதசப்பிரகரணம் | 1 | 0 | 0 |
| திருமூலர் திருமந்திரம் (ந-து) | 1 | 8 | 0 |
| பிரபுலிங்கலீலை மூலம் | 0 | 8 | 0 |
| கந்தபுராணச்சுருக்கம் | 0 | 12 | 0 |
| விருத்தாசலபுராணம் உரை | 0 | 10 | 0 |

இவைதவிர தங்களுக்குவேண்டும் பலவித புத்தகங்களும் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரைரூபாய் துகைக்கு குறைந்தபுத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பமுடியாது அரை அணாஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஓர் கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். மற்றவிஷயங்கள் கேட்லாககில் கவனித்துப்பார்க்கும்படி கோருகிறேன்.

கோ. லோகநாதமுதலியார்.

மனோன்மணிவிலாசம் பிரஸ், நெ-29,
வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.